# 14

# பின்னோக்கி – மற்றும் முன்னோக்கிப் பார்த்தல்

## (8:1–7)

*நாம், இயேசுவின் ஆசாரியத்துவத்தினுடைய மேன்மை பற்றி, எழுத்தாளரின் கலந்துரையாடலின் இருதயம் போன்ற மையப்பகுதியில் இருக்கிறோம். 5 முதல் 7 வரையிலான அதிகாரங்களில் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவத்தினுடைய பணியாளர் பற்றி எழுத்தாளர் கலந்துரையாடினார்: இயேசு. 9 மற்றும் 10 ஆகிய அதிகாரங்களில் அவர், கிறிஸ்தவத்தின் பிரதான ஆசாரியத்துவ ஊழியம் பற்றிக் கலந்துரையாடினார். 8ம் அதிகாரம் மாறுதலுக்கான ஒரு அதிகாரமாக உள்ளது. இது முதல் பிரிவைப் பின்னோக்கிப் பார்த்து அதை முடித்து வைக்கிறது. மேலும் இது முன்னோக்கியும் பார்த்து இரண்டாவது பிரிவை அறிமுகப்படுத்துகிறது.*

### பின்னோக்கிப் பார்த்தல் (8:1)

நீங்கள் ஒரு குழுவினருக்குப் பல இரவுகளாக ஒரு கதையைக் கூறிவருவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு இரவிலும் நீங்கள் அனேகமாக, முந்திய இரவுகளில் கூறப்பட்டவற்றின் தொகுப்பு ஒன்றுடன் தொடங்குவீர்கள்: ''கதையில் இந்த இடத்தில்தான் நாம் இருக்கிறோம்.'' எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும் 8ம் அதிகாரத்தை அவ்வாறே தொடங்கினார். "மேற்சொல்லியவைகளின் முக்கியமான *பொருளென்னவெனில்*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

7ம் அதிகாரத்தில் எழுத்தாளர், இயேசு மேன்மையான ஒரு பிரதான ஆசாரியராக இருப்பது ஏன் என்பதை விளக்குவதற்கு, விவாதங்களின் வரிசை ஒன்றைக் கொடுத்தார். இவையாவும் 8:1ல் "மேற்சொல்லியவைகளின்'' என் வார்த்தையில் உள்ளடங்குகின்றன: "இப்படிப்பட்ட பிரதான ஆசாரியர் ஒருவரை நாம் பெற்றிருக்கிறோம்." அதாவது, 7ம் அதிகாரத்தில் பேசப்பட்ட ஒருவரைப் போன்றவரை நாம் பிரதான ஆசாரியராகக் கொண்டிருக்கிறோம். 8ம் அதிகாரத்தின் தொடக்கத்தில், எழுத்தாளர் தமது விவாதங்களை உச்சகட்டத்திற்குக் கொண்டு சென்றார். இயேசு மேன்மையான ஒரு பிரதான ஆசாரியராக இருக்கிறார் (1) ஏனென்றால் அவர் இராஜரீகமான ஒரு பிரதான ஆசாரியராக இருக்கிறார் மற்றும் (2) ஏனென்றால் அவர் *பரலோகத்தில்* ஊழியம் செய்கிறார்.

''உண்டு'' என்பதே இவ்வசனப் பகுதியில் (வசனம் 1) நமக்கு மிகவும் குறிப்பிடத்தக்க வார்த்தையாக இருக்கிறது எனலாம்: "(இப்படிப்பட்ட) பிரதான ஆசாரியர் நமக்கு *உண்டு*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). யூதர்கள் பிரதான ஆசாரியர்களைக் *கொண்டிருந்தனர்* - இவர்கள் கி.பி. 70ல் எருசலேமின்

அழிவு வரையிலும் வரிசைத் தொடராக வந்த பிரதான ஆசாரியர்களாக இருந்தனர் - ஆனால் நாம் ஒரு பிரதான ஆசாரியரைக் *கொண்டிருக்கிறோம்* (நிகழ்கால வினைச் சொல்). நாம் *எப்போதுமே* ஒரு பிரதான ஆசாரியரைக் கொண்டிருப்போம். ஆகையால் நாம் எப்போதும் தேவனிடத்தில் சென்று சேரும் வழியைக் கொண்டிருப்போம்.[1]

## முன்னோக்கிப் பார்த்தல் (8:2-7)

*பரிசுத்த ஸ்தலம் (8:2-6அ)*

2ம் வசனத்தில் தொடங்கி, கிறிஸ்தவர்கள் ஒரு மேன்மையான பரிசுத்த ஸ்தலத்தைக் கொண்டுள்ளனர் என்ற கருத்தை, எழுத்தாளர் அடுத்து ஏற்படுத்தினார். அவரது சிந்தனை வரிகள் பின்வருவன போன்று செல்கின்றன:

(1) பிரதான ஆசாரியர் என்பவர் (பலி) செலுத்துவதற்கு ஏதாவது ஒன்*றையும்* அதைச் செலுத்தும் இடம் ஒன்*றையும்* கொண்டிருக்க வேண்டும் (வசனம் 3). இயேசுவினால் செலுத்தப்பட்ட அந்த "ஏதாவது ஒன்று," 7:27ல் குறிப்பிடப் பட்டிருந்தது மற்றும் அது பிற்பாடு கலந்துரையாடப்படும். இந்த சந்தர்ப்பப்பொருளில் எழுத்தாளர் *இடத்தைப் பற்றி* அதிகம் அக்கறை கொண்டிருந்தார்.

(2) இயேசு இரண்டு காரணங்களுக்காகப் பூமியில் பலிசெலுத்த இயலாதிருந்தது: அவர் பூமியின் மீது இருக்கவில்லை (வசனம் 1), மற்றும் பூமியின்மீது அதை ஏற்கனவே ஆசாரியர்கள் செய்துகொண்டு இருந்தனர் (வசனம் 4).

(3) இருப்பினும் அவர், பரலோகத்தில் ஒரு பலி செலுத்த முடியும். அங்குதான் பரிசுத்த ஸ்தலம் உள்ளது (வசனங்கள் 1, 2).

(4) மோசே கட்டியெழுப்பிய பரிசுத்த ஸ்தலத்தை (ஆசாரிப்புக் கூடாரத்தை[2])க் காட்டிலும், பரலோகத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலமானது பல காரணங்களினால் மிகவும் மேன்மையாக உள்ளது. எடுத்துக்காட்டாக,

- மோசே கட்டியெழுப்பிய பரிசுத்த ஸ்தலமானது, அதைக் கட்டியெழுப்ப மாபெரும் வேதனைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும் (வசனம் 5), அது ஒரு பிரதியாகவும் நிழலாகவும் மாத்திரமே இருந்தது.
- மற்றும், ஆசரிப்புக் கூடாரத்தின் தொடர்பாகச் செலுத்தப்பட்ட பலிகள், உண்மையான பலியின் மாதிரிகளாகவும் நிழல்களாகவும் மாத்திரமே இருந்தன (வசனங்கள் 4, 5அ).
- *உண்மையான* ஆசரிப்புக்கூடாரம் - பரலோகத்தில் - கர்த்தரால் கட்டப்பட்ட ஒன்றாக உள்ளது (வசனம் 2).

(5) பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தை (ஆசரிப்புக் கூடாரத்தை)க் காட்டிலும், பரலோகத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலம் மேன்மையாக இருப்பதற்கு, *மகாப்*பிரதான ஆசாரியர் அங்கு ஊழியம் செய்கிறார் என்பதே (வசனம் 2) காரணமாக உள்ளது.[3] "ஊழியம்" என்று இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, "ஊழியம்" என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இருப்பதில்லை. அதற்குப் பதிலாக, இது ஒருவர் தமது சொந்த செலவில் மற்றவர்களுக்கு ஊழியம்

செய்தலைச் சுட்டிக்காண்பிக்கும் சொற்றொடராக உள்ளது.[4] மற்றவர்கள் ஊழியம் செய்திருக்கின்றனர், ஆனால் இயேசு "*முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும்* பெற்றிருக்கிறார்" (தமிழ் வேதாகமத்தில் இது, "*மிகவும் மேன்மையான ஆசாரிய ஊழியத்தையும்* பெற்றிருக்கிறார்" என்று இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்) (வசனம் 6; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

**உடன்படிக்கை (8:6, 7)**

மேன்மையான ஆசாரியர் என்ற வகையில் இயேசு இருக்கிறார் என்பது எழுத்தாளரின் முதன்மை ஆய்வுக்கருத்தாக உள்ளது, ஆனால் மற்ற தலைப்புகளும் - மேன்மையான பலி, மேன்மையான பரிசுத்த ஸ்தலம் மற்றும் மேன்மையான உடன்படிக்கை போன்றவைகளும் - தொடர்ந்து குறிப்பிடப்பட்டன. இவையாவும், மேன்மையான பிரதான ஆசாரியர் என்ற வகையில் இயேசு இருக்கிறார் என்ற சத்தியத்துடன் தொடர்புடையவையாக உள்ளன.

- இயேசு மேன்மையான பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்றால், அவர் *மேன்மையான பலியைக்* கொண்டிருக்கவும் வேண்டும் - மற்றும் அவர் அவ்வாறே கொண்டிருக்கிறார்: தம்மையே பலியாக அளித்தார்.
- இயேசு மேன்மையான பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்றால், ஊழியம் செய்வதற்கு அவர் *மேன்மையான இடம்* ஒன்றையும் கொண்டிருக்கவும் வேண்டும் - மற்றும் அவர் அவ்வாறே கொண்டிருக்கிறார்: பரலோகத்தில் உண்மையான ஆசரிப்புக் கூடாரம்.
- இயேசு மேன்மையான பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்றால், அவர் *மேன்மையான உடன்படிக்கையைக்* கொண்டிருக்கவும் வேண்டும் - மற்றும் அவர் அவ்வாறே கொண்டிருக்கிறார்: யூதத்துவ உடன்படிக்கையான பழைய உடன்படிக்கையானது, லேவியத்துவ ஆசாரியத்துடன் தப்ப இயலாத வகையில் பிணைக்கப்பட்டிருந்தது, பாவங்களுக்கு மன்னிப்பை அருளும் புதிய உடன்படிக்கையை இயேசு கொண்டு வந்தார்.

8ம் அதிகாரத்தின் கடைசிப்பகுதியில், மேன்மையான உடன்படிக்கை என்ற கருத்து மேம்படுத்தப்பட்டுள்ளது. முந்திய அதிகாரத்தில் "இயேசு அவ்வளவு *விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்*" என்று குறிப்பிடப்பட்டது (7:22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). 8ம் அதிகாரத்தில் எழுத்தாளர் பின்வருமாறு கூறினார்:

> இவரோ (இயேசுவோ) விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட *விசேஷித்த உடன்படிக்கைக்கு* எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே (8:6, 7; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இயேசுவின் உடன்படிக்கை *மேன்மையானது* என்று எழுத்தாளர் கூறியது

ஏன்?

(1) *இயேசு இதன் மத்தியஸ்தராக இருப்பதால்* (வசனம் 6அ). எழுத்தாளர் எப்போதுமே இயேசுவினிடத்தில் திரும்பி வந்தார். பழைய உடன்படிக்கையின்கீழ், மக்களுக்கும் தேவனுக்கும் இடையில் பூரணமற்ற பிரதான ஆசாரியார் நின்றார். புதிய உடன்படிக்கையின்கீழ், நமக்கும் தேவனுக்கும் இடையில் நமது பூரணரான பிரதான ஆசாரியரே மத்தியஸ்தராக இருக்கிறார் (1 தீமோத்தேயு 2:5).

(2) *புதிய உடன்படிக்கை மேன்மையான வாக்குத்தத்தங்களைக் கொண்டிருப்பதால்* (வசனம் 6ஆ), பாவங்களுக்கு முழுமையான மற்றும் நிறைவான மன்னிப்பு உட்பட, பல மேன்மையான உடன்படிக்கைகள் மனதிற்கு வருகின்றன.[5] இந்த மேன்மையான உடன்படிக்கைகளில் சில, 8ம் அதிகாரத்தின் கடைசிப் பகுதியில் தரப்பட்டுள்ளன.

(3) *முதலாம் உடன்படிக்கையினால் ஒருக்காலும் நிறைவேற்ற முடியாதவற்றைப் புதிய உடன்படிக்கை நிறைவேற்றியதால்.* 7ம் அதிகாரத்தை நீங்கள் முதன்முறையாக வாசிக்குமபோது, "பிழையற்றது" என்ற சொற்றொடர் உங்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கலாம். பழைய உடன்படிக்கை பிழையானதாக இருந்தது என்று எழுத்தாளர் கூறினாரா? வாசிப்பதைத் தொடருங்கள். 8ம் வசனம் "*அவர்களைக்* குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி (என்னால் வலியுறுத்தப்படுகிறது). உடன்படிக்கையில் பிழை எதுவும் இருக்கவில்லை, ஆனால் மக்களிடத்தில் தான் தவறு இருந்தது. 9ம் வசனத்தைக் கவனியுங்கள்: "அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே." மக்கள் அந்த ஒப்பந்தத்தின் தங்கள் பகுதிக்கு ஏற்ப வாழவில்லை.

நிருபத்தை வாசிப்பவர்களில் சிலர், புதிய உடன்படிக்கை மேன்மையானதாக இருந்தது என்பதைச் சந்தேகப்படுவார்கள் என்று எழுத்தாளர் யூகித்தார். ஆகையால் அவர், பழைய ஏற்பாட்டிலேயே கூட, முதல் உடன்படிக்கை தேவனுடைய மக்களுடன் அவரது கடைசி ஒப்பந்தமாக இருக்கவில்லை என்று காண்பிக்க, உடனடியாக எரேமியா 31:31-34ஐ மேற்கோள் காண்பித்தார். இதன் கலந்துரையாடலை நாம் இன்னொரு பாடத்திற்கு விடும்படிக்கு இது மிகவும் முக்கியமான சத்தியமாக உள்ளது. இந்த வேளைக்கு நான், ஒரு சுருக்கமான தொகுப்புரையைக் கொடுக்க என்னை அனுமதியுங்கள்: நமது இருதயங்களுக்கு உறுதிப்பாட்டை அருளுகிற மேன்மையான ஒரு உடன்படிக்கையை இயேசு நமக்குக் கொடுத்தார்.[6]

| **கிறிஸ்தவம் மேன்மையானதாக இருப்பது ஏன்** | |
|---|---|
| நாம் கொண்டுள்ளது என்ன | இது நமக்குக் கொடுப்பது என்ன |
| மேன்மையான ஒரு பிரதான ஆசாரியர் | நமது தேவனிடம் செல்ல வழி |
| மேன்மையான ஒரு பரிசுத்த ஸ்தலம் | நமது ஊழியர் என்ற வகையில் இயேசு |
| மேன்மையான ஒரு உடன்படிக்கை | நமது இருதயங்களுக்கு உறுதிப்பாடு |

நாம் மேன்மையான ஒரு பிரதான ஆசாரியரை, மேன்மையான ஒரு பரிசுத்த

*ஸ்தலத்தை மற்றும் மேன்மையான ஒரு உடன்படிக்கையைக் கொண்டுள்ளோம். இத்துடன் நாம், 3ம் வசனத்தில் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ள, மேன்மையான ஒரு பலியைக் கொண்டிருக்கிறோம் என்ற கருத்தைக் கூடுதலாகத் தர முடியும்; மற்றும் மேன்மையான நமது வாக்குத்தத்தங்கள் பற்றி அதிகமாகக் கூற முடியும் (வசனம் 6). 8ம் அதிகாரம் பற்றிய நமது கலந்துரையாடலை "புதிய உடன்படிக்கை" மீதான நமது அடுத்த பாடத்தில் தொடருவோம்.*

---

*குறிப்புகள்*

[1]*"கிறிஸ்தவம் மேன்மையானதாக இருப்பது ஏன்?" என்ற வரைவட்டவணையைக் காணவும்.* [2]*ஆசரிப்புக் கூடாரம் 9ம் அதிகாரத்தின் தொடர்பாகக் கலந்துரையாடப்படும். இந்தப் புத்தகத்தின் வேறொரு பக்கத்தில் உள்ள, ஆசரிப்புக் கூடாரத்தின் வரைபடத்தைக் காணவும்.* [3]*"கிறிஸ்தவம் மேன்மையாக இருப்பது ஏன்?" என்ற வரைவட்டவணையில் காணவும்.* [4]Neil R. Lightfoot, *Jesus Christ Today* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 154. [5]*பின்வரும் வகுப்பு கலந்துரையாடலுக்கு இது ஒரு நல்ல நேரமாக உள்ளது: புதிய உடன்படிக்கையின் "மேன்மையான சில வாக்குத்தத்தங்கள் யாவை"?* [6]*மீண்டும் வரைவட்டவணையைக் காணுங்கள்.*